**தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டம் (மேலதிக நிதியளிப்பு) - 2015**

தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 திசெம்பர் 14 ஆந் திகதிய 2767 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும், தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவர்களாக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தேசிய நெடுஞ்சாலைகளின் கிட்டத்தட்ட 60 கிலோமீற்றர்களினை மேம்படுத்தல், புனரமைத்தல் மற்றும் மறுசீரமைத்தல் மூலம் தேசிய போக்குவரத்து வினைத்திறனை முன்னேற்றுதல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 13,728 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 105.60 மில்லினானதுடன் அதில் ரூபா 11,050 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 85 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 திசெம்பர் 14 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட போதிலும் 2016 திசெம்பர் 31 வரை கடனின் முடிவுத் திகதி நீடிக்கப்பட்டிருந்தது.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவின் ஆதிக்கத்தின் கீழ் எஞ்சியிருந்த 03 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் எல்லாவற்றிற்குமாக ஏற்படுத்தப்பட்டிருந்த ரூபா 31 மில்லியன் கூட்டுத்தொகையான செயற்பாட்டுக் கிரயங்கள் உரிய செயற்திட்டங்களிற்கு விகிதாசார அடிப்படையில் தாக்கல் செய்வதற்கு பதிலாக செயற்திட்டத்தின் கிரயமாக கருதப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 213.22 மில்லியன் கிரயத்தில் ஹிக்கடுவை தொடக்கம் தெற்கு அதிவேக பாதை வரையான வீதியின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் நடைபெறும் சிவில் வேலைகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி உரிய தொகைகளால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

### 2.2.2 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை

மீளாய்வாண்டின் இறுதியில் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 1.59 மில்லியன் பெறுமதியான சொத்துக்களின் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 8.6 ஆம் பிரிவுகளிற்கு முரணாக செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்டிருந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பதவியணி உறுப்பினர்களுக்காக ரூபா 1.40 மில்லியன் தொகையான மருத்துவச் செலவுகளின் மீள்நிரப்புகை மற்றும் ரூபா 2.61 மில்லியன் தொகையான மேந்தலைச் செலவுகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு திருப்பப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 85.00 | 11,050 | 3,126 | 17.24 | 2,334 | 68.62 | 8,996 |
| இலங்கை அரசாங்கம் | 20.60 | 2,678 | 1,480 | 10.14 | 1,478 | 32.80 | 4,665 |
| | **105.60** | **13,728** | **4,606** | **27.38** | **3,812** | **101.42** | **13,661** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், கடனின் கீழ் ரூபா 11,050 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 85 மில்லியன் ஒதுக்கீட்டில் 80 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 8,996 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 68.62 மில்லியன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

கிடைத்த தகவல்களின் பிரகாரம், 44.83 கிலோமீற்றர்கள் நீளமான 05 தேசிய வீதிகளின் பல பிரிவுகளின் முன்னேற்ற வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டத்தின் மேலதிக வேலைகளாக 2015 யூலை மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பாமன்கடை – கெஸ்வேவ வீதி மற்றும் நுகேகொடை – ஹோமாகம வீதி என்பவற்றின் பல பிரிவுகளின் முன்னேற்ற வேலைகள் செயற்திட்டத்தின் இறுதிக் காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூல வடிவமைப்பில் உள்ளடக்கப்பட்ட பல வீதிகளின் முன்னேற்ற வேலைகளின் நோக்கெல்லை வழக்கமான அம்சமாக செயற்திட்டத்தால் பின்னர் மாற்றப்பட்டிருந்தது. ஆகையால், மாத்தறை – கொடகம வீதியின் முன்னேற்ற வேலைகளின் ஒப்பந்தப் பெறுமதியில் 29.09 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 161.73 மில்லியன் பெறுமதியான மூல அளவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட 214 உருப்படிகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக் கிரயத்தின் 20.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 116.57 மில்லியன் பெறுமதியான 15 புதிய உருப்படிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், அளுத்கம தொடக்கம் தெற்கு அதிவேகப் பாதை வரையான வீதியின் முன்னேற்ற வேலைகளின் நோக்கெல்லை அவற்றின் மீதான வேலை ஆரம்பித்தல் முற்பணங்களின் மேலதிக தொகைகள் மீது ஒப்பந்தகாரருக்கு அதிக நிதி நன்மைகளை அனுமதித்து ரூபா 737.64 மில்லியன் பெறுமதியான அளவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட 326 உருப்படிகள் இரத்துச் செய்வதன் மூலம் மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) அளுத்கம தொடக்கம் தெற்கு அதிவேகப் பாதை வரையான மற்றும் ஹிக்கடுவ தொடக்கம் தெற்கு அதிவேகப் பாதை வரையான வீதிகளின் புனரமைப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரர் 2015 மே 07 ஆம் திகதி நடைபெற்ற வழிகாட்டல் குழுவின் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டவாறு முறையற்ற வேலைத் திட்டங்கள் மற்றும் வேலையிலீடுபடுத்தப்பட்ட தொழிலாளர் படையணியின் குறைவுகள் போன்ற ஒப்பந்தகாரரின் தவறுகளை கருத்தில் கொள்ளாது ஒவ்வொரு 90 நாட்கள் காலப்பகுதிக்காக காலநீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிடப்பட்ட வீதிகளிற்காக முறையே ஆரம்ப வேலைகள் மீது ரூபா 22.51 மில்லியன் மற்றும் ரூபா 26.80 மில்லியன் மேலதிகக் கிரயங்கள் மற்றும் ரூபா 20.33 மில்லியன் மற்றும் ரூபா 8.53 மில்லியன் விலைத்தளம்பல் என்பன ஏற்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ரூபா 38.93 மில்லியன் தாமதக் கட்டணங்கள் செயற்திட்டத்தால் விட்டுக்கொடுக்கப்பட்டிருந்தன.

(இ) கற்குறண்ட – நாகொடை வீதியின் முன்னேற்ற வேலைகள் உரிய நேரத்தில் ஒப்பந்தகாரருக்கு வேலைத்தளத்தினை கையளிப்பது தொடர்பான செயற்திட்ட தவறுகள் காரணமாக 90 நாட்கள் காலதாமதங்களுடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால், ரூபா 15.19 மில்லியன் விலைத்தளம்பல் மற்றும் ரூபா 17.31 மில்லியன் தாமதக் கட்டணங்கள் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டியிருந்தது.

(ஈ) வேலைகளின் நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிராத ஹிக்கடுவை தொடக்கம் தெற்கு அதிவேகப் பாதை வரையான வீதியின் முன்னேற்ற வேலைகளுக்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த குழாய் தொடரை நகர்த்துதல் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகளுக்காக செயற்திட்டத்தால் ரூபா 74.82 மில்லியன் தொகை செலவிடப்பட்டமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(உ) கீழேயுள்ள காரணங்களிற்காக நுகேகொடை – ஹோமாகம வீதியின் முன்னேற்ற வேலைகளுக்கான தர உறுதிப்பாட்டின் மீது போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டிருந்தது.

(i) முன்னேற்ற வேலைகளுக்கான ஒப்பந்த நிபந்தனையின் 4.9 ஆம் உட்பிரிவின் பிரகாரம், ஒப்பந்தம் ஆரம்பித்து 28 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்த தர முகாமைத்துவ உறுதிப்பாட்டு முறைமை திட்டம் ஒப்பந்தகாரரால் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்தகாரரால் தர உறுதிப்பாட்டு பரிசோதகர்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிராததால் 12 செயற்பாடுகளின் கீழ் தர நியமங்களின் கடைப்பிடித்தலை உறுதிப்படுத்துவதற்கு சரிபார்த்தல் பட்டியல் பேணப்பட்டுமிருக்கவில்லை.

(ii) முரண் கட்டளை ஒன்றின் கீழ் முன்னேற்ற வேலைகளுக்கான முன்வார்ப்பு கொங்கிறீட் மூடு பலகையின் வலிமை மற்றும் இடப்பட்ட கற்களைப் பரப்பி ஒன்றிணைத்தல் என்பவற்றின் மீது ஒப்பந்தகாரரிற்கு முறையே ரூபா 6.27 மில்லியன் மற்றும் ரூபா 1.45 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றுக்கான நொறுக்கும் வலிமையை உறுதிப்படுத்துதல் சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வேண்டப்பட்டிருந்த அதிகூடிய தடிப்புத்தன்மை வீச்சு 35 மி.மீ இலிருந்து 75 மி.மீ வரை இருக்கவேண்டிய போதிலும் 1+000 கிலோமீற்றர் முதல் 15+360 கிலோமீற்றர் வரை இடப்பட்ட அஸ்பால்ற் கொங்கிறீட் தள அடுக்கின் தடிப்புத்தன்மை தொடர்பான 2015 ஏப்ரல், செப்தெம்பர், ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களிற்கான பரிசோதனை பெறுபேறுகளின் பிரகாரம் 104.6 மி.மீ இலிருந்து 122 மி.மீ வரை இருந்தது. மேலும் பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம், வீதியின் மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுகள் மீது இடப்பட்ட அடுக்கினை சுற்றியுள்ள அஸ்பால்ற் கொங்கிறீட்டின் தடிப்புத்தன்மையானது அவற்றின் மீதான அதிகூடிய தடிப்புத்தன்மை வீச்சு 45 மி.மீ இலிருந்து 55 மி.மீ வரை பேணப்படவேண்டுமென வேண்டப்பட்டிருந்த போதிலும் 91.7 மி.மீ முதல் 108 மி.மீ வரை இருந்தது.

### 3.4 வழமைக்கு மாறான நடவடிக்கைகள்

கிடைத்த தகவல்களின் பிரகாரம், பெறுமதி சேர் வரிகளின் கொடுப்பனவுகளுக்கான விலக்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கு செயற்திட்டத்தால் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததன் விளைவால் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புக்களில் ரூபா 27.34 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரிகள் பாமன்கடை – கெஸ்பெவ வீதி முன்னேற்ற வேலைகளுக்காக செயற்திட்டத்தால் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 3.5 காணி சுவீகரித்தல் செயற்பாடுகள்

05 வீதிகளின் முன்னேற்ற வேலைகளின் காணி சுவீகரித்தல்கள் மற்றும் மீளக்குடியமர்த்தல் நோக்கங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் அவற்றின் மீது ரூபா 1,343 மில்லியன் மாத்திரமே மொத்த ஒதுக்கீடாக செய்யப்பட்ட போதிலும் 2015 திசெம்பர் 31 வரை ரூபா 2,582 மில்லியன் தொகையான இழப்பீடுகள் செலுத்தப்பட்டிருந்தது. சுவீகரிக்கப்படவேண்டிய அரச காணி மற்றும் தனியார் காணிகளின் விபரங்கள், காணி மற்றும் மீளக்குடியமர்த்தல் குழுவின் அனுமதி மீது செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் காணி சுவீகரித்தல் நோக்கங்களுக்காக செய்யப்பட்ட முற்பணக் கொடுப்பனவுகள் போன்றன செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவில் கிடைக்கத்தக்கதாக இருக்காமையால் காணி சுவீகரிப்புக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு மீதான நிதிசார் கட்டுப்பாடுகள் போதுமானதாக இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.